பக்கங்கள்: 12

காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 08 வியாழக்கிழமை 20.02.2025 கதிர் 104

## இது ரகசியம் அல்ல!

நேற்று நாடாளுமன்றத்தில் ஒரு சுவாரஸியமான சம்பவம் இடம்பெற்றது. ''வரலாறு முக்கியம் அமைச்சரே'' என்கிற தருணம் அது. அரசியலுக்கு வருவதற்கு ☞ 2

# சட்டம் ஒழுங்கைக் காப்பதற்கு உறுதியான முடிவுகள் தேவை

## அதற்கு ஒத்துழைக்கத் தயார் என்கிறார் சஜித்

**நாட்டின் சட்டம் ஒழுங்கை பாதுகாக்க ஆளும்தரப்பு உறுதியான தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும். அதற்கு நாங்களும் முடியுமான ஆதரவை வழங்கத் தயாராக இருக்கிறோம். நீதிமன்றத்தினுள் இடம்பெற்றுள்ள துப்பாக்கிச் சூடு தொடர்பில் ஆளும்தரப்பு நாடாளுமன்றத்தில் விசேட அறிவிப்பொன்றை முன்வைக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.**



நாடாளுமன்றத்தில் நேற்று விசேட ☞ 2

### ஒதுக்கப்பட்டுள்ள நிதியில்

## யாழ்ப்பாண பொது நூலகத்தை டிஜிற்றல் மயப்படுத்தவேண்டும்

### ஈபிடிபி வலியுறுத்து

யாழ். நூலகம் டிஜிற்றல் மயப்படுத்தப்பட வேண்டும் என்று ஈபிடிபியின் ஊடகச் செயலாளர் ஸ்ரீகாந் பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

அவர் நேற்று யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களிடம் பேசும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய வரவு செலவுத் ☞ 2

## நாமலுக்கு வந்த கவலை

மன்னார் நீதிமன்றத்தின் வெளியில் படுகொலை, கொழும்பு நீதிமன்றத்துக்குள் படுகொலை. சட்டத்தரணியை போன்று வேடமிட்டு கொலையாளிகள் நீதிமன்றத்துக்குள் செல்கிறார்கள். இந்தச் செய்தி சர்வதேசத்துக்கு சென்றால் யார் நம்பிக்கையுடன் இலங்கைக்கு வந்து முதலீடு செய்வார்கள்? கடந்த காலங்களைப் பற்றி பேசிக்கொண்டிருக்காமல் தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மீதான இரண்டாம் ☞ 2

## மன்னார் கனிய வள ஆய்வுக்கு நேற்றும் மக்கள் கடும் எதிர்ப்பு

### வெறுங்கையோடு திரும்பினர் அதிகாரிகள்

மன்னார்கொன்னையன் குடியிருப்பு பகுதியில் கள ஆய்வுசெய்து, கனியமணல் அகழ்வுக்கான சுற்றுச்சூழல் ஆய்வறிக்கையை வழங்க சுமார் 23 திணைக்களங்களைச் சேர்ந்த குழுவினர் நேற்று வருகை தந்தபோதும் மக்கள் அவர்களுக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்துப் போராட்டம் நடத்தினர். இதனால் ஆய்வுகள் எதனையும் மேற்கொள்ளாமலேயே அதிகாரிகள் திரும்பிச் செல்லும் நிலை ☞ 2



## நீதிமன்ற துப்பாக்கிச் சூட்டின் உண்மை பகிரங்கம் ஆகும்

### பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

புதுக்கடை நீதிமன்றத்தில் துப்பாக்கி சூடு மேற்கொண்ட நபர் புத்தளம் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். முறையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு இதன் பின்னணியின் உண்மை பகிரங்கப்படுத்தப்படும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வரவு செலவுத் திட்டத்தின் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். ☞ 8

## பல பெயர்களில் நடமாடித் திரிந்தவரே கனேமுல்ல சஞ்சிவவைக் கொன்றவர்

### பொலிஸார் தகவல்

பல பெயர்களில் நடமாடியவரே பாதாள உலகத் தலைவரான கனேமுல்ல சஞ்சீவவை நீதிமன்றத்தின் உள்ளே வைத்துப் படுகொலை செய்தவர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கனேமுல்ல சஞ்சீவ கொலையின் முக்கிய சந்தேகநபர் நேற்று பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்ட நிலையில், மேலும் பல தகவல்களை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

அவர் தொடர்பாக சிறப்பு செய்தியாளர் சந்திப்பை நடத்திய பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க, புத்தளம் பாலாவி பகுதியில் கைது செய்யப்பட்ட இந்த நபர் பல பெயர்களில் சுற்றித் திரிந்தவர் என்று தெரிவித்தார்.

அவரிடம் பல அடையாள அட்டைகள் இருப்பதாகவும், அதில் ஒன்றில் சட்டத்தரணியாக பணிபுரிவதைக் குறிக்க தயாரிக்கப்பட்ட சட்டத்தரணி அடையாள அட்டையும் அடங்குவதாகவும் அவர் கூறினார்.

அவர் முதலில் மொஹமட் அஸ்மன் ஷெரிப்தீன் என்ற பெயரில் தோன்றினார் என்றும், பின்னர் சமிந்து தில்ஷான் ☞ 9

## ஆளும்தரப்பின் பழிவாங்கல்களால் படையினர் மத்தியில் கடும் அதிருப்தி

### விமல் வீரவன்ச குற்றச்சாட்டு

ஆளும்தரப்பின் அரசியல் பழிவாங்கல்களால் பொலிஸ் உள்ளிட்ட பாதுகாப்புப் படையினர் அதிருப்தியடைந்துள்ளனர். இதனால் தேசிய பாதுகாப்பு பலவீனமடைந்து வருகிறது. அதேவேளை, பாதாள உலகக் குழுக்கள் மீண்டும் உயிர் பெற்று வருகின்றன என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

தேசிய சுதந்திர முன்னணி அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை (18) நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தற்போது நாட்டில் பல பகுதிகளிலும் தினந்தோறும் துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் பதிவாகிக்கொண்டிருக்கின்றன. மித்தெனிய பிரதேசத்தில் இரு சிறுவர்கள் உள்ளிட்ட மூவர் மீது துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இன்று நீதிமன்ற வளாகத்துக்குள்ளேயே துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

தற்போது பாதாள உலகக் குழுவினர் உயிர் பெற்றுள்ளனர். நாளுக்கு நாள் சமூகத்தில் பாதுகாப்பற்ற தன்மை அதிகரித்து வருகிறது. பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் அடிப்படை காரணிகள் இன்றி இடமாற்றம் செய்யப்படுகின்றனர். இவ்வாறு ஒரே சந்தர்ப்பத்தில் நூற்றுக்கும் மேற்பட்டோர் ஒருபோதும் இடமாற்றம் செய்யப்படவில்லை. ☞ 8

## மலையக மக்களின் உழைப்பு உச்சளவில் சுரண்டப்படுகிறது

### மட்டு. மாவட்ட எம்.பி. ஸ்ரீநேசன் கவலை

எமது மலையக உறவுகள் இன்றும் லயன் அறையில் வாழ்கிறார்கள். 200 ஆண்டு காலமாக இந்த நிலைமை தொடர்கிறது. அவர்களும் இந்த நாட்டின் பிரஜைகளே, மலையக மக்கள் உச்ச அளவில் உழைக்கிறார்கள். அவர்களின் உழைப்பு உச்ச அளவில் சுரண்டப்படுகிறது. இந்த நிலைமை மாற்றம் பெற வேண்டும். அவர்களுக்கு 1700 ரூபாய் சம்பளம் முறையாகவும், ☞ 8



## அரச பணியாளர் சம்பள உயர்வு தொழிற்சங்கங்களுக்கு அதிருப்தி

இந்த வருடத்திற்கான வரவு செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களின் சம்பள உயர்வு தொடர்பாக ஆளும்தரப்பின் முன்மொழிவு குறித்து பல தொழிற்சங்கங்கள் தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளன.

கொழும்பில் செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்து சந்திப்பில் உரையாற்றிய இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், ஆசிரியர்கள், அதிபர்களின் சம்பள உயர்வு தொடர்பான 'சுபோதனி குழு அறிக்கை' குறித்து அவதானம் செலுத்தப்படவில்லை என்று குற்றஞ்சாட்டினார்.

''மூன்று ஆண்டுகளுக்குச் சம்பளம் உயர்த்தப்பட்டுள்ளது. நாங்கள் கேட்கிறோம், 2026இற்கான வரவு செலவுத் திட்டம் இல்லையா? 2027இற்கான வரவு செலவுத் திட்டம் இல்லையா? 3 வருடங்களுக்கு சம்பள உயர்வு என்றால் என்ன? நாங்கள் அனைவரும் 20,000 ரூபா சம்பள உயர்வை எதிர்பார்த்தோம். முக்கிய ☞ 8

## மீள்குடியேற்றத்திற்கான நிதியை ரூ. 5 ஆயிரம் மில்லியனாக்குக

### காதர் மஸ்தான் எம்.பி. கோரிக்கை

மீள்குடியேற்றத்துக்கு ஒதுக்கியிருக்கும் நிதியை 5 ஆயிரம் மில்லியனாக அதிகரித்து போரால் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றும் நடவடிக்கையை முழுமைப்படுத்தவேண்டும். அதற்கான முறையான செயற்றிட்டத்தை ஆளும்தரப்பு அமைக்க வேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வரவு - செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான முதலாம் நாள் விவாதத்தில் செவ்வாய்க்கிழமை கலந்துகொண்டு ☞ 8

## இனி இது .....

முன்னர் அல்லது வந்ததற்குப் பின்னராவது வரலாற்றைத் தெரிந்துகொள்வது அவசியம் என்பதை வலியுறுத்துவதாக அமைந்தது.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கேட்ட கேள்வி ஒன்றைச் சரியாகப் புரிந்துகொள்ளாத அருச்சுனா அவசரப்பட்டு நாடாளுமன்றத்தில் மன்னிப்புக் கேட்டார். நாடாளுமன்ற உறுப்பினர் கபிர் ஹாசிம் ஜேவிபியினரை இலக்கு வைத்து பந்தை அடிக்க, ''குறுக்கால இந்த கௌசிக் வந்தால்'' தருணத்தைப் போன்று உள்ளே வந்த அருச்சுனா எம்.பி. விடயத்தையே நமுத்துப் போகச் செய்துவிட்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் இந்த விவகாரத்தைக் கையிலெடுத்தவர்.

''அநுரகுமார திஸாநாயக்க தனது வரவு செலவுத் திட்ட உரையில் யாழ். நூலகம் தொடர்பில் கூறியிருந்தார். அதற்குத் தீ வைப்பதற்கு அரசியல் கட்சியொன்று உதவியது என்று அவர் குறிப்பிட்டிருந்தார். ஆம் எமது தாய் கட்சியின் பெயர் அதனுடன் தொடர்புபடுத்தப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சியை சேர்ந்த இருவர் அங்கிருந்தமையினால் அந்தக் கட்சி மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. அதற்காக நாங்கள் கவலையடைகின்றோம். ரணில் விக்கிரமசிங்க சில வருடங்களுக்கு முன்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் என்ற வகையில் அந்தச் சம்பவத்திற்காக நாடாளுமன்றத்தில் மன்னிப்புக் கோரினார்.

அதுபோன்று பௌத்தர்களின் புனித தலமான தலதா மாளிகை மீது குண்டு தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பில் ஜே.வி.பி மன்னிப்பு கோரியதா? யாழ். நூலகம் தொடர்பில் கதைக்கும் நீங்கள் தலதா மாளிகை மீதான தாக்குதலுக்காகச் சுய விமர்சனம் செய்தீர்களா? இதனால் உங்களுக்கு மற்றையவர்கள் தொடர்பில் கதைக்க உரிமை உள்ளதா? 74ஆம் ஆண்டுக்கான சாபத்திற்கு நீங்களே பொறுப்பாளர்கள்'' என ஜே.வி.பியினரை கடுமையாக விமர்சித்தார்.

உடனே குறுக்காலே புகுந்த அருச்சுனா எம்.பி. ஒழுங்குப்பிரச்சினையை முன்வைத்து எழுந்தார். , ''யாழ். நூலகத்துக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டமை தொடர்பில் இவர் கூறியிருந்தார். இந்த நிதி ஒதுக்கீட்டுக்காக ஆளும்தரப்புக்கு நான் நன்றி கூறுகின்றேன். அடுத்ததாக தலதா மாளிகை மீதான குண்டுத் தாக்குதலுக்குநாங்கள்மன்னிப்புகோரவில்லை என்று இவர் கூறியுள்ளார். அப்போது எனக்கு 7 வயதாகவே இருந்தது. அந்தச் சம்பவத்தை புலிகள் செய்திருந்தால், அவர்கள் எங்களை பிரதிநிதித்துவப்படுத்துவர்களாக இருந்தால் அந்தப் பிழையை அவர்கள் செய்திருந்தால் அதற்காகநாங்கள்மன்னிப்புகோருகின்றோம்.

1983ஆம் ஆண்டில் இருந்து திட்டமிட்ட பாரபட்சத்தை எதிர்நோக்கியதால் தமிழ் மக்கள் ஆயுதம் ஏந்த வேண்டி வந்தது. பழையதைப் பேச விரும்பவில்லை. முன்னோக்கிச் செல்லவே விரும்புகின்றோம். இனப்பிரச்சினைதொடர்பாகப்பேசவேண்டாம். நாங்கள் ஒரே நாடாக பயணிப்போம் என்று ஆளும் மற்றும் எதிர்க்கட்சியினரை நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம்'' என்றார்.

இதன்போது குறுக்கிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம், நீங்கள் (அச்சுனாவை நோக்கி) ஜே.வி.பி சார்பாக மன்னிப்பு கோருகின்றீர்களா? அல்லது தமிழ் மக்கள் சார்பாக மன்னிப்பு கோருகின்றீர்களா? என்று கேள்வியெழுப்பினார்.

இதற்கு எழுந்து பதிலளித்த அர்ச்சுனா, ''தலதா மாளிகை மீதான குண்டுத் தாக்குதல் புலிகளினால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்பட்டது. விடுதலைப் புலிகளை சேர்ந்த 55 ஆயிரம் பேர் வடக்கை சேர்ந்தவர்கள் அதனால் வட மாகாண மக்கள் சார்பாகவே மன்னிப்பு கோரினேன்'' என்றார்.

இவ்வேளையில் மீண்டும் பதிலளித்து உரையாற்றிய கபீர் ஹாசீம் கூறுகையில், ''ஜே.வி.பியினரும் தாக்குதல் நடத்தினர். அதற்காகஅவர்கள்மன்னிப்புகோரவேண்டும் என்பதனையேநான்கூறினேன். அவர்களிடம் இருந்தே அவ்விதமான மன்னிப்பை எதிர்பார்க்கின்றேன்'' என்றார்.

''முடிச்சுவிட்டீங்க போங்க!''

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## சட்டம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூற்றொன்றை முன்வைத்து இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் சட்டம் ஒழுங்கு தொடர்பில் பெரும் பிரச்சினைஏற்பட்டிருக்கிறது.நாளாந்தம்மனிதப் படுகொலைகள் இடம்பெறுகின்றன. சிறிய குழந்தைகளும்கொல்லப்படுகின்றன.அதனால் சட்டம் ஒழுங்கு தொடர்பில் உறுதியான தீர்மானம் ஒன்று தேவை.

நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டவும் நாட்டின் சட்டத்தை மதிக்கின்ற ஒழுக்கமுள்ள சமூகத்தைக் கட்டியெழுப்பவும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள நாங்களும் ஆளும்தரப்புக்கு ஆதரவளிக்கத் தயாராக இருக்கிறோம்.

புதுக்கடை நிதிமன்றத்தில் இடம்பெற்றிருக்கும் இந்த சம்பவத்தின் மூலம் நீதிமன்றத்துக்கும் செல்ல முடியாது என்றால் நாட்டின் நிலை என்ன? கொலை அச்சுறுத்தலுடன்தான் நீதிமன்றத்துக்கும் செல்வதாக இருந்தால் அது பெரும் பிரச்சினை. இந்த நிலை சமூகத்தில் வேறு இடங்களிலும் இடம்பெறுமாக இருந்தால் அதுவும் பெரும் பிரச்சினையாகும்.

அதனால் ஆளும்தரப்பு சட்டம் ஒழுங்கு தொடர்பில் பலமான திர்மானங்களை எடுக்க வேண்டும். இந்தச் சமூகத்தில் கொலை, கொள்ளை, மோசடி இடம்பெற முடியாது. அதனால் நாட்டின் சட்டம் ஒழுங்கை பாதுகாக்க ஆளும்தரப்பு எடுக்கும் பலமான தீர்மானங்களுக்கு எங்களால் வழங்க முடியமான ஆதரவை வழங்கத் தயாராக இருக்கிறோம்.

இந்த காலப் பகுதியில் பெருமளவில் மனிதப் படுகொலைகள் இடம்பெற்றிருப்பதை நாங்கள் சுட்டிக்காட்டி இருந்தோம். இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதில்லை என்றே வெளிப்படையில் தெரிகிறது. எனவே இடம்பெற்றுள்ள இந்தச் சம்பவம் தொடர்பில் ஆளும்தரப்பு விசேட அறிவிப்பொன்றை விடுக்கவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

## நாமலுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைய வேண்டுமாயின் முதலில் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டும். ''தேசிய பாதுகாப்புக்கு இம்முறை குறைவான நிதியை ஒதுக்கியுள்ளோம்.ஆகவேஅனைவரும்சுதந்திரமாக வீதியில் செல்லலாம்'' என்று அமைச்சர் ஒருவர் குறிப்பிடுகிறார். நடைமுறையில் நிலைமை அவ்வாறா உள்ளது?

நேற்று இரவு மித்தெனிய பகுதியில் சிறுமி உட்படஒருவர்படுகொலைசெய்யப்பட்டுள்ளார். இன்று நீதிமன்றத்துக்குள் படுகொலை. நீதிமன்ற விசாரணையின்போது நீதிபதியின் முன்னிலையில் படுகொலை, துப்பாக்கிச்சூடு, பாதாள குழுக்களாக இருக்கலாம். அவர்களின் ஒழுக்கம் பற்றிப் பேசவில்லை. நீதிமன்றத்துக்குள் துப்பாக்கிச்சூடு; இதுவே பாரதூரம்.

பாதுகாப்புப் பிரச்சினையில்லை அனைவரும் எங்கும் செல்லலாம் என்று ஆளும்தரப்புக் குறிப்பிடுகிறது. ஆனால் மறுபுறம் பட்டப்பகலில் மனிதப் படுகொலைகள் இடம்பெறுகின்றன. வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கும் ஆளும்தரப்பு அழைப்பு விடுக்கிறது.

மன்னார் நீதிமன்றத்தின் வெளியில் படுகொலை, கொழும்பு நீதிமன்றத்துக்குள் படுகொலை. சட்டத்தரணியை போன்று வேடமிட்டுகொலையாளிகள்நீதிமன்றத்துக்குள் செல்கிறார்கள். இந்தச் செய்தி சர்வதேசத்துக்கு சென்றார் யார். நம்பிக்கையுடன் இலங்கைக்கு வந்து முதலீடு செய்வார்கள்? ஆகவே கடந்த காலங்களைப் பற்றி பேசிக்கொண்டிருக்காமல் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள் - என்றார்.

## யாழ்ப்பாண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திட்டத்தில் சொல்லப்பட்டுள்ள விடயங்கள், வெறுமனவே எழுத்தில் மட்டும் இல்லாமல், செயலிலும் அமைய வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகின்றோம். குறிப்பாக வடக்கு கிழக்கு பிரதேசங்களுக்கு முன்மொழியப்பட்டுள்ள நிதிகள் சீரான முறையில் ஒதுக்கப்பட வேண்டும்.

''யாழ்.நூலகத்திற்குமுன்மொழியப்பட்டுள்ள 100 மில்லியன் ரூபாய்களும் உட்கட்டமைப்பு வசதிகளுக்காகவும் கணினி வசதிகளை அதிகரிப்பதற்காகவும் முன்மொழியப்பட்டிருப்பதாக சொல்லப்படுகின்றது.

தென்னாசியாவில் சிறந்த நூலகமாகக் காணப்பட்ட எமது நூலகத்தினை டிஜிற்றல் மயப்படுத்துவதற்கு இந்த நிதியைப் பயன்படுத்தவேண்டும். அதன் மூலம் தென்னாசியாவின்தலைசிறந்தநூலகங்களுள் ஒன்றாக விளங்கிய எமது நூலகத்திற்கு இன்னுமொரு பரிமாணத்தினை வழங்க முடியும் என்பதே எமது செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவின் சிந்தனையாக இருக்கின்றது. இதனை வலியுறுத்தி அவர் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றினையும் எழுத இருக்கின்றார்'' - என்றார்.

# நாடாளுமன்ற அமர்வுக் காலதிலாவது

# எனக்கு பாதுகாப்பு தாருங்கள் அருச்சுனா எம்.பி. மன்றாட்டு

நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்துகொள்ளும் காலப்பகுதியிலாவது தனக்குபாதுகாப்புவழங்குமாறுநாடாளுமன்ற உறுப்பினர்அருச்சுனாஇராமநாதன்சபையில் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வரவு செலவுத் திட்டத்தின் மீதான இரண்டாம் நாள் விவாதத்தின்போது ஒழுங்குப் பிரச்சினையொன்றை முன்வைத்து அவர் இதனை வலியுறுத்தினார்.

கொழும்பு நீதிமன்றத்தில் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. இந்நிலையில் யாழ்ப்பாணத்தில் இருவரால் அச்சுறுத்தப்பட்டுள்ளேன். நான் நாடாளுமன்ற அமர்வு முடிவடைந்த பின்னர் யாழ்ப்பாணத்திற்குச் செல்லத் திட்டமிட்டுள்ளேன்.

அதனால் நாடாளுமன்ற அமர்வு காலத்திலாவது எனக்கு பாதுகாப்பை வழங்க நடவடிக்கைஎடுக்கவேண்டும்என்றுபொலிஸ் அமைச்சரிடம் கேட்டுக்கொள்கிறேன். இது முக்கியமான விடயமாக உள்ளது என்றார்.

இதன்போது சபைக்கு தலைமை தாங்கிய பிரதி சபாநாயகர், இந்த விடயத்தை சபாநாயகருக்கு அனுப்ப நடவடிக்கை எடுப்பதாக அறிவித்தார்.

# கட்டுப்பணத்தை மீளப்பெறலாம்

ஒத்திவைக்கப்பட்ட2023ஆம்ஆண்டுக்கான உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான கட்டுப்பணத்தை செலுத்தியவர்கள் தங்களது பற்றுச்சீட்டுகளை சமர்ப்பித்தால் அந்த பணத்தை மீள பெற்றுக்கொள்ள முடியும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கட்டுப்பணத்தைமீளப்பெற்றுக்கொள்வதற்கு கட்டுப்பணத்தைசெலுத்தியபோதுவழங்கப்பட்ட பற்றுச்சீட்டுகளின் பிரதியைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

அத்துடன், கட்டுப்பணத்தை மீளப்பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பக் கடிதம் ஒன்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

அதன்படி, எதிர்வரும் 28ஆம் திகதிக்குள் மாவட்ட தேர்தல் அலுவலகங்களில் குறித்த ஆவணங்களைச் சமர்ப்பித்தால், வேட்பாளர்கள் தங்களது கட்டுப்பணத்தை மீளப்பெற்றுக்கொள்ள முடியும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# கஜேந்திரன், வேலன் சுவாமிகள் பொலிஸ் நிலையத்திற்கு அழைப்பு

தையிட்டிவிகாரைக்கு எதிரான போராட்டம் தொடர்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன், வேலன் சுவாமிகள் ஆகியோரை வாக்குமூலம் அளிக்க பலாலி பொலிஸாரால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரையை அகற்றக்கோரி நடத்தப்பட்ட போராட்டம் தொடர்பாக வாக்குமூலம் சேகரிக்க பொலிஸாரால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பலாலி பொலிஸ் நிலையத் திற்கு இன்று நண்பகல் 12 மணிக்கு இருவரையும் ஆஜராகுமாறு பொலிஸாரால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது

## மன்னார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்டது.

மன்னார் கொன்னையன் குடியிருப்பு பகுதியில் கடந்த இரண்டு தடவை கனிய மணல் அகழ்வுக்கான ஆய்வுக்காக அதிகாரிகள் வந்தபோதும் மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்திருந்தனர். நேற்று மூன்றாவதுதடவையாகவும், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைமையில் சுமார் 23 திணைக்களங்களைச் சேர்ந்தவர்கள் அப்பகுதிக்கு வருகை தந்திருந்தனர்.

அதிகாரிகளின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்படும் என்பதை எதிர்பார்த்த பொலிஸார்போராட்டத்தில்ஈடுபடக்கூடியவர்கள் என்று கருதப்பட்டவர்களுக்கு எதிராக மன்னார் நீதிமன்றில் தடை உத்தரவைப் பெற்றிருந்தனர்.

இந்நிலையில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைமையில் சுமார் 23 திணைக்களங்கள அதிகாரிகளும் மன்னார் மாவட்டச் செயலகத்துக்கு கட்டங்கட்டமாக வருகை தந்தனர்.

இவர்களின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மாவட்டச் செயலகப் பகுதியில் போராட்டம் நடத்தப்படலாம் என்பதால் பொலிஸார் அப்பகுதியில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் வழிகாட்டலில்சுமார்23திணைக்களங்களைச் சேர்ந்த குழுவினர் தோட்டவெளி கொன்னையன் குடியிருப்பு பகுதிக்குச் சென்றனர்.

அவ்வேளை, அப்பகுதியில் நூற்றுக்கணக்கான பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

இருப்பினும் அங்கு கூடியிருந்த பிரதேச மக்கள் அதிகாரிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து பதாகைகளை ஏந்தியவாறு கோஷமிட்டனர். மக்களின் காணிகளின் ஊடாக தனியார் காணியில்கனியமணல்பரிசோதனைக்கான கள ஆய்வு நடவடிக்கைகள் தொடர்ந்தபோது அதற்கு அனுமதி மறுத்து மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதேவேளை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றும் -முன்தினமும் நாடாளுமன்றத்தில் இந்த கனிய மணல் பரிசோதனை மற்றும் அகழ்வுநடவடிக்கைக்கு எதிராக உரையாற்றியிருந்தனர்.

அதன் அடிப்படையில் இவ்விடயம் உயர் மட்ட அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டது. உடனடியாக இன்றைய தினம் முன்னெடுக்கப்படவிருந்த களஆய்வுகள் இடைநிறுத்தப்பட்டனர். அதிகாரிகள் அந்தப் பகுதியிலிருந்து திரும்பிச் செல்ல அறிவுறுத்தப்பட்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# எமக்கு ஒதுக்கப்பட்ட நிதியை நாம் முழுமையாக செலவு செய்து மேலதிக நிதியை கோரவேண்டும்

## வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் உறுதி

எமக்கு ஒதுக்கப்பட்ட நிதியை நாம் முழுமையாகச் செலவு செய்து மேலதிக நிதியை நாம் கோரவேண்டும் எனத் தெரிவித்த வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் வடமாகாணத்திற்கு அதிக நிதி ஒதுக்கியதற்கு ஜனாதிபதிக்கு நன்றிகளையும் தெரிவித்தார்.

வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் திட்டமீளாய்வு கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலின்போதே ஆளுநர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவுக்கையில் -

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வாக்குறுதியளித்தவாறு வடக்கு மாகாணத்துக்கு பல்வேறு



திட்டங்களுக்கு பெருமளவு நிதி ஒதுக்கியுள்ளார். அவருக்கு எமது வடக்கு மக்கள் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் ஜனாதிபதியால் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாணத்துக்கு பல்வேறு வகையிலும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதிகளவான நிதியும் வடக்கு மாகாண சபைக்கே ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் ஜனாதிபதி தனது உரையில், வடக்கு அதிகாரிகள் கோரிய நிதியையே வழங்கியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எமக்கு ஒதுக்கப்பட்ட நிதியை நாம் முழுமையாகச் செலவு செய்யவேண்டும். எவ்வளவு விரைவாக அந்த நிதியை செலவு செய்து முடித்து மேலதிக நிதியை நாம் கோரவேண்டும். இது எமக்கு சவாலானதுதான். நாம் நிதியை திருப்பி அனுப்பாமலே நிதியை திருப்பி அனுப்பியதான குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வருகின்றது. இந்த நிலையில், பெருமளவு நிதி எமக்கு கிடைக்கப்பெறும் நிலையில் அதை உரிய முறையில் செலவு செய்யவேண்டும். எமது செயற்பாடுகளை ஊடகங்கள் உட்பட பல தரப்புக்களும் உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருக் கின்றன. எனவே, வெளிப்படைத் தன்மையாக நிதியை விரைவாக செலவு செய்யவேண்டும்.

ஜனாதிபதியால் வீதி அபிவிருத்திக்காக விசேட நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த நிதியை வடக்கின் அனைத்து மாவட்டங்களுக்கும் சமமாகப் பகிரத் தேவையில்லை. தேவைப்பாடுகள் எங்கு அதிகமோ அங்கு அதிகளவு நிதியை ஒதுக்குங்கள். இந்தத் திட்டத்துக்கு யாழ்ப்பாணத்திலிருந்துகொண்டு தெரிவுகளை முன்னெடுக்காமல் வன்னிப் பிராந்தியத்தின் ஒவ்வொரு இடத்துக்கும் சென்று நேரடியாகப் பார்த்து தெரிவு செய்யுங்கள். அப்போதுதான் அந்த மக்கள் அனுபவிக்கின்ற வலி உங்களுக்குத் தெரியும்.

எமக்கு இந்தத் திட்டங்களைச் செயற்படுத்தி முடிப்பது சவாலானதுதான். எங்களால் முடியும் என நினைத்துக்கொண்டு இதைச் செய்யுங்கள். இரவு, பகல் பாராமல் இதைச் செய்யவேண்டும். நாங்கள் முன்மாதிரியானவர்கள் என்பதை செயலில் காட்டுங்கள்.

இந்தத் திட்டங்களுக்கான ஒப்பந்தங்கள் வழங்கப்படும்போது ஊழல், இலஞ்சம் என்பன இருக்கக்கூடாது. எல்லாம் வெளிப்படைத்தன்மையாக நடைபெறவேண்டும். இந்த அரசாங்கத்தின் கொள்கையும் அதுதான். - என்றார் ஆளுநர்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், அதிகாரிகளின் அர்ப்பணிப்பில்தான் இவற்றின் வெற்றி தங்கியிருக்கின்றது. எமது மாகாணத்துக்கு உட்பட்ட அனைத்துத் திணைக்களங்களும் ஒன்றிணைந்து செயற்படுத்தி முடிக்கவேண்டும். - என்றார்.

# மது போதையில் பாடசாலைக்குள் சென்ற பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு விளக்கமறியல்

முல்லைத்தீவு, மல்லாவி பிரதேசத்தில் உள்ள அரச பாடசாலை ஒன்றிற்குள் மது போதையில் சென்று மாணவிகளிடம் அநாகரீகமாக செயற்பட்ட சம்பவம்தொடர்பில் கைது செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிளை எதிர்வரும் மார்ச் மாதம் 05 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவுநீதிவான்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மல்லாவி பொலிஸ் நிலையத்தில்கடமையாற்றும்43வயதுடைய பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பொலிஸ்கான்ஸ்டபிள் முல்லைத்தீவு, மல்லாவி பிரதேசத்தில் உள்ள அரச பாடசாலை ஒன்றிற்குள் திங்கட்கிழமை மது போதையில்சென்றுள்ளநிலையில் அங்கிருந்த மாணவிகளிடம் அநாகரீகமாகசெயற்பட்டுள்ளார்.

இது தொடர்பில் மல்லாவி பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில்சந்தேக நபர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# குப்பைமேடாகி வரும் புத்தங்கல

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை புத்தங்கல வீதியிலுள்ள கழிவு மறுசுழற்சி நிலையத்தின் அருகில் குப்பை மலையாக காட்சியளித்த பிரதேசம் ‘க்ளீன் சிறிலங்கா;செயற்திட்டத்தின் மூலம் சுத்தம் செய்யப்பட்டு வருகின்றது.

அம்பாறை பிரதேசத்தில் சேகரிக்கப்படும் குப்பைகள்,அங்குள்ள புத்தங்கல வனப்பகுதியில் தொடர்ச்சியாக கொட்டப்பட்டதன் காரணமாக அப்பகுதியில் குப்பை மலையொன்று உருவாகியிருந்தது.

இதற்கிடையே, குப்பை மலைக்கு யானைகள் உணவு தேடி வரத் தொடங்கியதன் காரணமாக அப்பிரதேசத்தின் ஊடான போக்குவரத்து பாதுகாப்பற்றதாகமாறியது.கடந்தஞாயிற்றுக்கிழமை ஆரம்பமான இச்சிரமதானம் தற்போது வரை சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கடந்த 2024 ஆம் ஆண்டின் ஜூன் மாதத்தில் அம்பாறையில்நடைபெற்றபொசோன்வலயத்தைப் பார்வையிடச் சென்ற 65 வயதான முதியவர் ஒருவரும், இன்னொரு பொலிஸ் உத்தியோகத்தரும் புத்தங்கல பிரதேசத்தில் வைத்து காட்டு யானைத் தாக்குதலுக்கு இலக்காகியிருந்தனர். தாக்குதலுக்கு இலக்கான முதியவர் உயிரிழந்த நிலையில்,பொலிஸ் உத்தியோகத்தர் நீண்ட நாள் சிகிச்சையின் பின் மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பியிருந்தார்.





அது போன்ற பல்வேறு சந்தர்ப்பங்கள் அதற்கு முன்னரும் இடம்பெற்றிருந்தன. அதேபோன்று, இரசாயனக் கலவைகள் கொண்ட குப்பைகளை உணவாக உட்கொண்டதன் காரணமாக கடந்த 2024 ஆம் ஆண்டின் ஒக்ரோபர்மாதம்புத்தங்கலகுப்பைமலையில் காட்டுயானையொன்று உயிரிழந்திருந்தது.

இந்நிலையில் குறித்த குப்பை மலை ‘க்ளீன் சிறிலங்கா’ செயற்திட்டத்தின் ஊடாக சுத்தப்படுத்தப்பட்டு அங்கு கொட்டப்பட்டிருந்த குப்பைகளும் அகற்றப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் இப்பிரதேசத்தில் கொட்டப்படும் குப்பைகளை தினந்தோறும் உண்பதற்கு 10 இற்கும்மேற்பட்ட யானைகள் வருகை தருவதுடன் அருகில் உள்ள பொதுமக்களின் உடைமைகளுக்கும் சேதம் விளைவித்திருந்தன. அம்பாறை நகரப்பகுதி உள்ளிட்ட ஏனைய புறநகர பிரதேசங்களில் இருந்து இப்பகுதிக்கு குப்பைகள் மாநகர மற்றும் பிரதேச சபையின் வாகனங்கள் மூலம் கொண்டு வரப்பட்டு கடந்த காலங்களில் கொட்டப்பட்டுவந்தமை குறிப்பிடத்தக்கது.



இதனால் அம்பாறை நகரில் இருந்து குப்பைகள் வாகனங்கள் மூலம் தினமும் கொண்டுவரப்பட்டு கொட்டப்படுகின்றதுடன் மலைபோல் குவிந்துள்ள குறித்த குப்பைகளை யானைகள் தினமும் உண்ண வருகின்றமை குறிப்பிடத்தக்கது. காட்டு யானைகளுக்கும், அவ்வழியால் போக்குவரத்தில் ஈடுபட்ட மனிதர்களுக்கும் பெரும் ஆபத்தாக இருந்த புத்தங்கல குப்பை மலை அகற்றப்பட்டமை தொடர்பில் அம்பாறை பிரதேச சிவில் சமூக அமைப்புகள் பலவும் மகிழ்ச்சி தெரிவித்துள்ளன.

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# மறுசீரமைப்பு அவசியம்

நேற்று ஒரே நாளில் மட்டும் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் மூன்று வெவ்வேறு படுகொலைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் இரண்டு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள். அதிலும் ஒன்று இலங்கை முழுவதையுமே அதிர வைத்த நீதிமன்றச் சம்பவம்.

நீதிமன்றத்திற்கு உள்ளே நுழைந்து வழக்கு நடைபெறும் நடைபெறும் இடம்வரை சென்று இந்தப் படுகொலை நிகழ்த்தப்பட்டுள்ளது. கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கொண்ட கொழும்பு புதுக்கடை நீதிமன்றத்திற்குள் துணிகரமாக நுழைந்து நீதிமன்ற நடவடிக்கைகளின்போதே ஒருவரைக் கொல்லும் துணிவு கொலையாளிக்கு எப்படி ஏற்பட்டது?

பொலிஸார் வழங்கும் தகவல்களின் அடிப்படையில் கொலையாளி சட்டத்தரணி வேடத்தில் நீதிமன்றத்திற்குள் நுழைந்துள்ளார். அவருக்கு துப்பாக்கியை நீதிமன்றத்திற்குள் கொண்டு வந்து கொடுப்பதற்காகப் பெண் ஒருவரும் சட்டத்தரணி வேடத்தில் நீதிமன்றத்திற்குள் நுழைந்துள்ளார். அவர் சட்டப் புத்தகம் ஒன்றின் நடுவே 'ரிவோல்வர்' நகர் துப்பாக்கியை மறைத்து வைத்து எடுத்து வந்துள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

மொத்தத்தில் மிகச் சிறப்பாக உளவு பார்க்கப்பட்டு, நன்கு திட்டமிடப்பட்டு, பல நாள்கள் ஒத்திகை பார்க்கப்பட்டே இந்தக் கொலை நிகழ்த்தப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. தலைநகரின் பாதுகாப்பு நிறைந்த பகுதி ஒன்றுக்குள் இவ்வாறான தாக்குதல் ஒன்றை நடத்திவிட்டு கொலையாளிகளால் தப்பிச் செல்லவும் முடிந்திருக்கின்றது என்பது எங்கோ சட்ட அமுலாக்கலில் உள்ள மிகப் பெரிய பின்னடைவை ஓட்டையைத் தெட்டத் தெளிவாகக் காட்டுகின்றது.

பாதாள உலகக் குழுக்களின் மீது எடுக்கப்பட்டுவரும் தீவிரமான நடவடிக்கைகளின் காரணமாக ஆளும்தரப்பு மீது அழுத்தம் கொடுப்பதற்காக இந்தக் கொலை நிகழ்த்தப்பட்டுள்ளதாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்திருக்கின்றார். அவரது கருத்து ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை. பாதாள உலகக் குழுக்கள் மீது தீவிரமான நடவடிக்கைகளை சட்ட அமுலாக்கல் பிரிவினர் எடுத்திருந்தால் நீதிமன்றத்திற்குள் நுழைந்து சுடும் துணிவு கொலையாளிகளுக்கு ஏற்பட்டிருக்காது.

நீண்ட காலமாகவே நடந்து வரும் கொலைகளின் பின்னணியில், பாதாள உலகக் குழுக்களுக்கு இடையிலான மோதலில் அவர்கள் கொல்லப்படுகின்றார்கள் என்கிற வகையில் சட்ட அமுலாக்கல் பிரிவினர் இந்த விவகாரத்தை மிகவும் மெத்தனப் போக்கில் கையாண்டதன் விளைவே இப்போது விவகாரம் பாரதூரமானதாக மாறுவதற்கான வழியை ஏற்படுத்தியிருக்கின்றது எனலாம். பழிவாங்கல் படலமாகத் தொடர் கொலைகள் இடம்பெறத் தொடங்கியபோதே தீவிரமாக பாதாள உலகக் குழுவினர் மீது நடவடிக்கை எடுத்திருந்தால் சட்ட அமுலாக்கலைக் கேள்விக்குட்படுத்தியிருக்கும் இந்தக் கொலைகள் இடம்பெற்றிருக்காது.

அதுபோன்று பாதாள உலகக் குழுக்களின் கொலைகளுக்காக முன்னாள் மற்றும் இன்னாள் படையினர் பயன்படுத்தப்படுகின்றார்கள் என்பது தெரிந்த பின்னரும், அதனை அடையாளப்படுத்தி நாட்டுக்கு அரச அலைவர் வெளிப்படுத்திய பின்னரும் அவர்களைக் கைது செய்வதற்கு எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படாததும் இன்றைய சம்பவத்திற்கு பெரும் துணையாக இருந்திருக்கின்றது.

தேசிய மக்கள் சக்தியும் அதன் முதுகெலும்பான ஜேவிபியும் படையினருக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அஞ்சுகின்ற பின்னணியில், அப்படி நடவடிக்கை எடுப்பது தமது தேசப்பற்றைக் கேள்விக்குள்ளாக்கி விடும் என்கிற அச்சம் வெளிப்படையானது. போரில் தவறிழைத்த படையினரை தண்டிக்கமாட்டோம் என்று ஆளும்தரப்பினர் வெளிப்படையாகவே கூறிவரும் நிலையில் தண்டனை விலக்களிப்பு இத்தகைய குற்றங்களை ஊக்குவிக்கும் மறைமுகக் காரணியாக இருப்பதையும் புறந்தள்ளிவிட முடியாது.

# இறக்காமம் பொலீஸ் நிலையத்தின் புதிய பொறுப்பதிகாரி பதவியேற்பு

(பாறுக் ஷிஹான்)

இறக்காமம் பொலீஸ் நிலையத்தின் புதிய நிலையப் பொறுப்பதிகாரியாக பிரதான பொலீஸ் பரிசோதகர் எச்.எம்.பி.பிரியந்த பதவி ஏற்றுக்கொண்டார்.

திங்கட்கிழமை அம்பாறை மாவட்டம் இறக்காமம் பொலிஸ் நிலையத்தின் இரண்டாவது பொறுப்பதிகாரியாக அவர் பொறுப்பேற்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த காலங்களில் தமன பொலிஸ் பிரிவின் கீழிருந்து இறக்காமம் பிரதேசம் 2021 இல் தனியான பொலிஸ் பிரிவாக மாற்றப்பட்டது. இதன்போது இறக்காமம் பொலிஸ் நிலையத்தின் முதலாவது புதிய பொறுப்பதிகாரியாக அன்று மஹிந்த சேனாரத்ன என்பவர் பொறுப்பேற்று பின்னர் தனது மூன்று வருட சேவையின்பின் இடமாற்றலாகி சென்றமை குறிப்பிடத்தக்கது.





# ஐஸ், கஞ்சா, கசிப்பு போதைப்பொருள்களுடன் 42 பேர் காத்தான்குடிப் பொலிஸாரினால் கைது

குற்றச்செயல்களுடன் தொடர்புபட்ட 42 பேர் காத்தான்குடி பொலிஸார் நடத்திய திடீர் சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கைகளின் போது கைது செய்யப்பட்டுள்ளனர் என காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.



மட்டக்களப்பு மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகரின் வழிகாட்டலில் காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர்.எம்.ர்னாநாயக்காவின் பணிப்புரையின் பேரில் காத்தான்குடி குற்றத்தடுப்பு பொலிஸார் மற்றும் போதை ஒழிப்பு பிரிவினர் குறித்த தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.



இதன் போது, ஐஸ் போதைப் பொருள்களுடன் 15 பேரும், கேரள கஞ்சாவை வைத்திருந்த ஒருவரும், சட்டவிரோத சிகரெட்களுடன் இருவரும் கசிப்பு போதை பொருள் விற்பனை மற்றும் தயாரிப்பில் ஈடுபட்ட 24 நபர்களுமாக மொத்தம் 42 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து ஐஸ், கேரள கஞ்சா, கசிப்பு , சிகரெட்கள், கசிப்பு தயாரிப்பு உபகரணங்கள், எரிவாயு சிலிண்டர் என்பன மீட்கப்பட்டுள்ளன.

கைதான நபர்கள் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் செவ்வாய்க்கிழமை ஆஜர் படுத்தப்பட்டதுடன் காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# மனைவியை தாக்கியபோது தடுத்த மாமனாரை பொல்லால் தாக்கிக் கொன்ற மருமகன் கைது

மகளை தாக்கிய மருமகனின் செயலை தட்டிக்கேட்ட மாமனார் மீது மருமகன் பொல்லால் தாக்கியதில் மாமனார் உயிரிழந்ததையடுத்து, மருமகன் கைது செய்யப்பட்ட சம்பவம் செவ்வாய்க்கிழமை வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள சின்னவெம்புகிரான் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சின்னவேம்புகிரான் பிரதேசத்தைச் சேர்ந்த 66 வயதுடைய நபரே இந்த சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

செவ்வாய்க்கிழமை பகல் தனது மகளுக்கும் மருமகனுக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதத்தின்போது மருமகன் மகளை தாக்கியதை தந்தை கண்டுள்ளார்.

அவ்வேளை தனது மருமகனின் செயலை கண்டித்தவரின் தலையில் மருமகன் பொல்லால் அடித்துள்ளார்.



இதில் படுகாயமடைந்த தந்தை கீழே வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து தாக்குதலை நடத்தியவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸ் நிலைய பெரும் குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# விளையாட்டு விழா

(சினீஸ் கான்)

களுத்துறை மத்ரஷதுல் ஹூதா அரபுக்கல்லூரியின் வருடாந்த விளையாட்டு விழா களுத்துறை பாகிஸ்தான் விளையாட்டு மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் அதிதியாக களுத்துறை நகர சபை முன்னாள் உறுப்பினர் ஹிஷாம் சுஹைல் கலந்துகொண்டு, வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கிவைத்தார்.







# டிப்பர் மோதி அரியாலையில் செவ்வாய்யன்று ஒருவர் சாவு

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அரியாலை மாம்பழம் சந்தியில், டிப்பர் வாகனம் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர், சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர், 55 வயதுடைய ஆண் ஒருவர் ஆவார்.

யாழ்ப்பாணம் நோக்கி சென்று கொண்டிருந்த குறித்த நபரின் சைக்கிள்மீது, டிப்பர் வாகனம் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் யாழ்ப் பாணம்போதனாவைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

விபத்தினை ஏற்படுத்திய சாரதி யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.





முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உ ங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

SUPERMARKET

4th Project

இது ஒரு
கற்பகவனம்
செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalaikkathir

# வாய்க்கால் ஓரத்தில் நடப்பட்ட மரங்களை கட்டக்காலிகளிடமிருந்து பாதுகாக்க வேலி

## நிலம் அபகரிக்கப்படவில்லை என உதவிப் பிரதேச செயலர் விளக்கம்

தனது வீட்டு மதிலின் முன் பகுதியில் உள்ள வாய்க்கால் ஓரத்தில் நடப்பட்ட மரங்களை கட்டாக்காலி மாடுகளிடம் இருந்து பாதுகாக்கவே தற்காலிகமாக வலை வேலி அமைக்கப்பட்டுள்ளதாகவும், நிலம் அபகரிக்கப்படவில்லை எனவும் உதவிப் பிரதேச செயலாளர் த.தர்மேந்திரா தெரிவித்துள்ளார்.

வவுனியா, பண்டாரிக்குளம் - வேப்பங்குளம் வீதியில் வாய்க்கால் அருகில் மரங்கள் நடப்பட்டு வலையால் வேலி இடப்பட்டு நிலம் அபகரிக்கப்படுவதாக பொதுமக்கள் தெரிவித்ததாக சில ஊடகங்களில் வெளிவந்த செய்தி தொடர்பாக விளக்கமளித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

நான் எனது வீட்டு வளவில் பயன்தரு மரங்கள், மூலிகை மரங்கள் பலவற்றை நட்டு பராமரித்து வருகின்றேன். அது போல் அழிவடையும் நிலையில் உள்ள நிழல் தரு மரங்கள் மற்றும் சில மூலிகை மரங்களையும் எனது வீட்டின் முன் பகுதியில் உள்ள வாய்க்கால் ஓரத்தில் பல மாதங்களாக நட்டு பராமரித்து வருகின்றேன். வீதியால் செல்பவர்களும் அதில் பயன்பெற்றுள்ளனர். தற்போதும் புதிதாக சில மரங்களை நட்டுள்ளேன்.



குறித்த மரங்களை கட்டாக்காலி மாடுகள் தினமும் சேதப்படுத்துவதால் அவை வளரவில்லை.

எனவே, குறித்த மரங்களை பாதுகாப்பதற்காகவே தற்காலிகமாக அந்த மரங்கள் உள்ள வாய்க்கால் பகுதியில் எனது மதிலுக்கு வெளியே வலையால் தற்காலிக வேலி அமைத்துள்ளேன். இது நீர் வழிந்து ஓடுவதற்கு எவ்வகையிலும் தடையாக இல்லை. இந்த மரங்கள் வளர்ந்ததும் வலைகளை அகற்றி விடுவேன். இதில் நிலம் அபகரிக்கும் எண்ணம் எண்ணிடம் இல்லை எனத் தெரிவித்தார். 100

# வவுனியாவில் மாற்றுத் திறனாளிகளுக்கான மாவட்டமட்ட தடகள விளையாட்டுப் போட்டி

மாற்றுத் திறனாளிகளுக்கான மாவட்ட மட்ட தடகள விளையாட்டுப் போட்டி செவ்வாய்க்கிழமை வவுனியாயங்ஸ்ரார்ஸ்டார் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றிருந்தது.

இதன்போது மாற்றுத் திறனாளிகளின் பல்வேறு விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றதுடன், வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.



சமூக சேவைகள் திணைக்களம் மற்றும் வவுனியா மாவட்டச் செயலகம் இணைந்து நடத்தும் வவுனியா மாவட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான போட்டியிலே மாவட்ட செயலாளர் பீ.ஏ.சரத் சந்திர, மேலதிக மாவட்ட செயலாளர் தி.திரேஸ்குமார், செட்டிகுளம் உதவி பிரதேச செயலாளர் த.தர்மேந்திரா, உதவி மாவட்ட செயலாளர் சார்ஜா மற்றும் அரச உத்தியோகத்தர்கள், மாற்றுத்திறனாளிகள் எனபலரும் கலந்து கொண்டிருத்தனர்.



இந்தப் போட்டியிலே வவுனியா மாவட்டத்தில் உள்ள அனைத்து மாற்றுத் திறனாளிகளும் ஆர்வமுடன் கலந்து கொண்டிருந்தமையை அவதானிக்க கூடியதாக இருந்தது.






# பரிசளிப்பு விழாவும் கௌரவிப்பு நிகழ்வும்

(சியாஜ்)

மதுரங்குளி மீடியாவின் ஏற்பாட்டில் கடந்த ரமழ்ன் மாதத்தில் இடம்பெற்ற இஸ்லாமிய வினா - விடை போட்டி நிகழ்ச்சியின் பரிசளிப்பும் விழாவும் , புலமையாளர்கள் மற்றும் ஆளுமைகள் கௌரவிப்பு நிகழ்வும் எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணிக்கு ஓய்வுபெற்ற நல்லாந்தழுவை ஆரம்ப பாடசாலையின் முன்னாள் அதிபர் என்.எம்.எம். நஜீப் தலைமையில் மதுரங்குளி ட்ரீம் செடண்ரில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் கற்பிட்டி பிரதேச சபை உறுப்பினர் கே.எம்.எம் பைசர் மரைக்காரின் அழைப்பின் பேரில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் கலந்து சிறப்பிக்க உள்ளார்.

இவ்விழாவில் கடந்த ரமழான் மாதத்தில் நடைபெற்ற போட்டி நிகழ்ச்சியில் பங்கு பற்றி அதிகூடிய புள்ளிகளைப் பெற்று வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்பட்டவர்களில் அன்றைய தினம் குலுக்கள் முறையில் அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு பணப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

மேலும் 2023, 2024 ஆண்டுகளில் தரம் - 05 புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் முகமாக பதக்கம் அணிவித்து, நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்படுவதுடன் இன்னும் விஷேட கௌரவிப்பாக ஓய்வு பெற்ற முன்னாள் அதிபர்களான என்.எம்.எம். நஜீப், எம்.எச்.எம். றாசிக், ஏ. சீ. நஜிமுதீன் ஆகியோருடன் புத்தளம் சிரேஷ்ட ஊடகவியலாளரும், சமூகசேவையாளருமான எம்.யூ.எம். சனூன் ஆகியோர் கௌரவிக்கப்பட உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# டாக்டர் விக்கினேஸ்வரா நினைவாக நூல் வெளியீடு

டாக்டர் விக்கினேஸ்வராவின் மூன்றாவது ஆண்டு நினைவாக ஈழத்தின் பிரபல்ய எழுத்தாளர் இ.சு.முரளிதரன் எழுதிய 'கதைப்பந்தாட்டம்' எனும் நூல் தற்போது தாயகத்தில் வெளிவருகிறது.


சுன்னாகத்தில் நாற்பது ஆண்டுகள் மருத்துவ பணியாற்றிய வைத்தியர் ப. விக்கினேஸ்வரா அமரராகி (22-2-2022) மூன்று வருடமாகிறது. ஆனால் அவரிடம் சிகிச்சைபெற்ற மக்கள் இன்றும் அவரது திறமைகளையும், சேவைகளையும் புகழ்ந்து நினைவு கூருகின்றனர்.

ஜீவநதி பதிப்பகத்தின் 436 ஆவது வெளியீடாக, பிரபல வைத்தியரும் இடர்காலத்தில் மண்பயனுறச் சேவை நல்கிய மக்கள் மருத்துவர் சுன்னாகம் டாக்டர் விக்கினேஸ்வரா அவர்களின் மூன்றாவது ஆண்டு நினைவாக, இ.சு.முரளிதரன் எழுதிய கதைப்பந்தாட்டம் - சுவைஞனின் மதிப்பீட்டுப் படிவம் எனும் நூல் வெளிவருகின்றது.




ஒவ்வொரு வருடமும் டாக்டர் ப.விக்கினேஸ்வரா நினைவாக ஈழத்து எழுத்தாளர்களின் நூல்கள் வெளியிடப்பட்டுவருகின்றமை அறிந்ததே.

2022 இல் மறைந்த டாக்டர் ப.விக்கினேஸ்வராவின் 31 ஆம் நாள் நினைவாக பேராசிரியர் பாலசுகுமார் எழுதிய 'ஈழத்தில் மாட்டு வண்டிச் சவாரியும் தமிழர் மரபும்' எனும் நூல் வெளியானது.




இதன்பின் 2023 இல் டாக்டர் ப.விக்கினேஸ்வராவின் முதலாவது ஆண்டு நினைவாக ஈழத்தின் பிரபல்ய எழுத்தாளர் தீபச்செல்வன் எழுதிய 'பள்ளிக் கூடங்கள் கட்டடக் கூடுகள் அல்ல' எனும் கல்வியியல் கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியிடப்பட்டது.

கடந்த வருடம் 2024 இல் டாக்டர் விக்கினேஸ்வரா ஈராண்டு நினைவாக கலாநிதி த.கலாமணி அவர்களால் எழுதுப்பெற்ற 35 படைப்பாளர்களின் நூல்களுக்கான அணிந்துரைகளின் தொகுப்பு நூலான 'கலாநிதி த.கலாமணி அணிந்துரைகள்' எனும் நூல் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது டாக்டர் விக்கினேஸ்வராவின் மூன்றாவது ஆண்டு நினைவாக 'கதைப்பந்தாட்டம்' எனும் நூல் தற்போது தாயகத்தில் வெளிவருகிறது.

# கிழக்கு மாகாணத்தை கட்டியெழுப்புங்கள் கலாநிதி ஹிஸ்புல்லாஹ் எம்.பி. கோரிக்கை

(சினீஸ் கான்)

அரசாங்கத்தினுடைய முதலாவது வரவு செலவுத் திட்டத்தை ஜனாதிபதி சபையில் சமர்ப்பித்தார். அவருக்கு எமது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம். வரவு செலவுத்திட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ள சில விடயங்கள் பாராட்டத்தக்கது. இருந்தபோதிலும் அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு எதிர்பார்த்த அளவு இடம்பெறவில்லை. அதேபோல் கிழக்கு மாகாணம் முற்று முழுதாக புறக்கணிக்கப்பட்டுள்ளது என்றும் கிழக்கு மாகாணத்தை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

இந்தவரவு செலவுத்திட்டத்தில் கிழக்கு மாகாணம் முற்று முழுதாக புறக்கணிக்கப்பட்டுள்ளது என்ற செய்தியை நான் இங்கு சொல்லிவைக்கவேண்டும். கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கென்று எந்தவொரு விஷேட நிதியும் ஒதுக்கப்படவில்லை. வடக்கு மாகாணத்திற்கு பாரியளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது அதனை வரவேற்கிறோம் பாராட்டி நன்றி தெரிவிக்கிறோம். அதேபோல் கிழக்கு மாகாணம் யுத்தத்தால் மிக மோசமாக பாதிக்கப்பட்ட பிரதேசமாகவும் மூவின மக்களும் ஒற்றுமையாக வாழும் பிரதேசமாகவும் காணப்படுகிறது.

இருந்தபோதிலும் கிழக்கு மாகாணசபைக்கு கூட போதியளவு நிதி அரசாங்கத்தால் கிடைப்பதில்லை. இந்த மாகாணம் இயற்கை, செயற்கை அனர்த்தங்களால் தொடர்ச்சியாக பாதிக்கப்படும் பிரதேசமாக இருக்கிறது.

அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பாலம்கள், பாடசாலைகளை புனரமைப்பதற்குத் தேவையான எந்தவொரு ஒதுக்கீடும் இதுவரை செய்யப்படவில்லை.

எனவே இந்த பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்படாவிட்டாலும் அரசாங்கத்தால் ஒதுக்கீடு செய்ய முடியும். ஆகவே கிழக்கு மாகாணத்தில் பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கான நிதிகளை ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், தென்கிழக்கு பல்கலைக்கழகம் பல்வேறு தேவைகளோடு காணப்படுகிறது. போதுமான கட்டடங்கள் இல்லை, ஒவ்வொரு வருடமும் வெள்ளம் வரும் போது நீர் நிறைந்து மூடவேண்டிய நிலை காணப்படுகிறது. பல்கலைக்கழகத்திற்குள் நுழைய முடியாத அளவு வெள்ளம் நிறைந்து காணப்படுகிறது. இப்பிரச்சினையை தீர்ப்பதற்கும் பல்கலைக்கழகத்தை வெள்ள அனர்த்தத்தில் இருந்து நிரந்தரமாக பாதுகாப்பதற்குத் தேவையான நிதியினை ஒதுக்கீடு செய்வதுடன் ஒலுவில் துறைமுகத்தை பிரயோசனப்படும் வகையில்



மாற்றுவதற்கு தேவையான வசதிகளை செய்து கட்டியெழுப்பவேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உள்ளது.

அதேபோல், கிழக்கு மாகாணமானது மீன்பிடி துறையில் முன்னேற்றமடைய வேண்டிய மாகாணமாக இருந்தபோதிலும் வாழைச்சேனை துறைமுகத்தில் எந்தவொரு வசதியும் இல்லாமல் இருக்கிறது. அதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் வாழைச்சேனை கடதாசி ஆலையை மீண்டும் முழுமையாக இயக்க முடியுமாக இருந்தால் பல வேலைவாய்ப்புக்களை உருவாக்க முடியும் எனவும் அவரது உரையில் குறிப்பிட்டார்.



காலைக்கதிர் Kalaikkathir

## மலையக ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுதியாகவும் கிடைக்கப் பெற வேண்டும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசன் சபையில் வலியுறுத்தினார்.

வரவுசெலவுத்திட்டத்தின்மீதானஇரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் இதஷனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வரவுசெலவுத்திட்டத்தில்பலமுற்போக்கான விடயங்கள் இருப்பதை வரவேற்கிறோம். தமிழர் பாரம்பரியத்தை உலகுக்கு எடுத்துரைத்த யாழ் நூலகம் தேர்தலுக்காகத் தீக்கிரையாக்கப்பட்டது என்று ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார். ஆம் அது உண்மையே. முன்னாள்ஜனாதிபதிஜே.ஆர்.ஜயவர்தனவின் செல்லப்பிள்ளைகளாக இருந்த காமினி திசாநாயக்க, லலித் அத்துலத்முதலி, ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் பெயர்களும் யாழ் நூலக எரிப்புடன் குறிப்பிடப்பட்டது.

வரவு செலவுத் திட்டத்தில் யாழ். நூலகத்தை புனரமைப்பதற்கு 100 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதை வரவேற்கிறோம்.அத்துடன் போரால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு வட்டுவாக்கல் பாலத்தை புனரமைப்பதற்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதனையும் வரவேற்கிறோம்.

நான் கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறேன் ஆகவே எமது மாகாணம் மற்றும் மக்களின் நலன் குறித்தும் அவதானம் செலுத்தவேண்டும். 2025ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் கிழக்கு மாகாணம் பற்றி ஏதும் குறிப்பிடப்படவில்லை. கிழக்கின் அபிவிருத்தி பக்கத்து நாட்டுக்கு வழங்கப்பட்டுள்ளது.

30 ஆண்டுகால போரால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டன. அதேபோல் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக கிழக்கு மாகாணத்தின் விவசாய நிலங்களும் உட்கட்டமைப்பும் குடியிறுப்புக்களும் பாதிக்கப்பட்டன. ஆகவே அபிவிருத்தி எனும் போது கிழக்கு மாகாணத்தைப் புறக்கணிக்க முடியாது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் படுவான்கரை மற்றும் எழுவான்கரை ஆகிய பகுதிகளை நிலத்தால் இணைக்கவேண்டும் என்று பல ஆண்டுகாலமாக தொடர்ச்சியாக வலியுறுத்துகிறோம். இவ்விடயம் குறித்து ஆளும்தரப்பு விசேட கவனம் செலுத்த வேண்டும் என்பதை உரிய தரப்புக்கு சுட்டிக்காட்டுகிறேன்.

கடந்த காலங்களில் பச்சை கட்சி ஆட்சியிலும் நீலம் கட்சி ஆட்சியிலும், மொட்டு கட்சி ஆட்சியிலும் மாகாணங்களுக்கிடையில் வேறுபாடுகள் காணப்பட்டன. தற்போது சிவப்பு கட்சி ஆட்சியில் உள்ளது. ஆகவே அனைத்து மாகாணங்களும் சமத்துவமாக பார்க்கப்படவேண்டும்.

கிழக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஆளும் தரப்பிலும், எதிர்தரப்பிலும் உறுப்பினர்கள் உள்ளார்கள். ஆகவே கிழக்கு மாகாணத்துக்கான அபிவிருத்தியில் கரிசனை கொள்ளுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நல்லிணக்கத்தை இதயசுத்தியால் ஏற்படுத்த வேண்டும். வடக்கு, தெற்குடன் சகோதரத்துவத்துடன் கைகோர்க்க வேண்டுமாயின் போருக்குப் பின்னரான உண்மைகள்வெளிக்கொணரப்படவேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு பரிகாரகால நிவாரணம்வழங்கப்படவேண்டும். அத்துடன் கடந்த கால கசப்பான சம்பவங்கள் மீண்டும் தோற்றம் பெறாமலிருப்பதற்கான வலுவான பொறிமுறைகள் வகுக்கப்பட வேண்டும்.

பெருந்தோட்ட மக்கள் தொடர்பில் விசேடமாக குறிப்பிட வேண்டும். எமது மலையகஉறவுகள்இன்றும்லயன் அறையில் வாழ்கிறார்கள். 200 ஆண்டு காலமாகவே இந்த நிலைமை தொடர்கிறது.இந்த மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுத்ததால் மாத்திரமே முன்னேற முடியும்.

பெருந்தோட்ட மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்குதீர்வுவழங்கிசமத்துவமாக பார்க்க வேண்டும். அவர்களும் இந்த நாட்டின் பிரஜைகள்.மலையக மக்கள் உச்ச அளவில் உழைக்கிறார்கள்.அவர்களின் உழைப்பு உச்ச அளவில் சுரண்டப்படுகிறது. இந்த நிலைமை மாற்றம் பெற வேண்டும். அவர்களுக்கு 1700 ரூபா சம்பளம் முறையாகவும் உறுதியாகவும் கிடைக்கப் பெற வேண்டும்.

அரசியல் நோக்கத்துக்காகவே உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக குறிப்பிடப்படுகிறது. நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு தொடர்பில் ஆளும்தரப்பு விசேட கவனம் செலுத்தவேண்டும். பாதுகாப்பு விவகாரத்தில் ஆளும்தரப்பை நெருக்கடிக்குள்ளாக்க எவரேனும் முயற்சிக்கலாம். ஆகவே ஆளும்தரப்புநடாளுமன்றஉறுப்பினர்களின் பாதுகாப்புக்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றார்.

# தமிழ் அரசின் முடிவு புரிந்கொள்ளப்படாமல் கூட்டமைப்பை உடைத்தோம் என்கிறார்கள்

## மந்திகையில் சுமந்திரன் விளக்கம்

உள்ளூராட்சிசபைத்தேர்தலில்தமிழ்த்தேசியக்கூட்டமைப்புக்குள்ளே இருக்கின்ற கட்சிகள் தனித்தனியாகப் போட்டியிட்டு, பின்னர் ஒன்றாக ஆட்சியமைப்பது என்ற எமது முடிவை இன்று மற்றைய கட்சிகளின் தலைவர்களும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். ஆனால் அந்த முடிவு சரியான விதத்தில் புரிந்துகொள்ளப்படாமல், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நாங்கள் பிரித்துவிட்டோம் என்ற கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன என்று இலங்கைத் தமிழரசுக் கட்சின் பதில் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் உடுப்பிட்டித் தொகுதியின் உள்ளூராட்சி வேட்பாளர்களைத் தெரிவுசெய்யும் ஆலோசனைக் கூட்டம் மந்திகை மடத்தடியில் அமைந்துள்ள வடமராட்சி தமிழ் அரசுக் கட்சியின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பாக தொகுதி அடிப்படையிலான கலந்துரையாடல்கள் தற்போது நடந்துகொண்டிருக்கின்றன. யாழ்ப்பாணம் மாவட்டத்தை பொறுத்தவரையில் 17 சபைகள் உள்ளன. இந்தச் சபைகள் அமைந்துள்ள வெவ்வேறு தொகுதிகளில் கலந்துரையாடி, அதன் பின்னர் மாவட்டக் கிளையில் இது குறித்து பேசிச் சில முடிவுகளை எடுக்கவேண்டிய தேவையுள்ளது.

கடந்த வாரத்தில் மாவட்டக் கிளையில் தீர்மானம் எடுத்தோம். அதன்படி ஒவ்வெரு தொகுதிகளிலும் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. அதன்படி, உடுப்பிட்டித் தொகுதியைச் சேர்ந்த எமது கட்சி கிளையுடன் கலந்துரையாடல் ஒன்று இடம்பெறுகின்றது.

இந்தத் தொகுதியில் இரண்டு சபைகள் உள்ளன. கரவெட்டி பிரதேச சபையும், வல்வெட்டித்துறை நகர சபையும் உள்ளன. ஆகவே, இந்த இரண்டு சபைகளிலும் நாங்கள் போட்டியிடுகின்ற முறைமை குறித்து, எமது உறுப்பினர்களுடன் கலந்துரையாடவுள்ளோம்.

எமது கட்சி தனித்துப் போட்டியிடுவது என்ற முடிவை சென்ற தடவை தேர்தல் நடைபெறுவதற்கு முன்பாகவே நாங்கள் எடுத்திருந்தோம். அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளே இருக்கின்ற கட்சிகள் தனித்தனியாகப் போட்டியிட்டு, பின்னர் ஒன்ற=ாக ஆட்சியமைப்பது என்ற முடிவு எடுக்கப்பட்டது. அந்த முடிவு சரியான விதத்தில் புரிந்துகொள்ளப்படாமல், நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பிரித்துவிட்டோம் என்ற கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

ஆனால், இந்தத் தேர்தல் முறைமையைக் கருத்தில் கொண்டு தனியாக ஒரு கட்சி ஆட்சியமைப்பது மிகவும் கஷ்டமான விடயம் என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆகவே, இப்போது, நாங்கள் சிபாரிசு செய்த அந்த முறை சிறந்தது என்ற எண்ணம் ஏனைய கட்சித் தலைவர்கள் மத்தியிலும் காணப்படுகின்றது. ஆகவே, அவர்களிடமும் நாங்கள் இது குறித்துப் பேசியிருக்கின்றோம்.

வெவ்வேறு இடங்களில் சிலவேளைகளில் சற்று வித்தியாசமான அணுகுமுறைகளைநாங்கள்கையாளவேண்டியுள்ளதாகஇருக்கின்றது. இந்தத் தேர்தல் முறைமையை எப்படியாக எங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்துவது என்பது குறித்து ஒவ்வொரு சபையாக நாங்கள் ஆராய வேண்டிய தேவை இருக்கின்றது- - என்றார்.

## அரச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடயம் என்னவென்றால், எங்கள் ஊதியப் போராட்டம் சுபோதனி குழு அறிக்கையின் மீதமுள்ள மூன்றில் இரண்டு பங்கைப் பெறுவதற்கானதாக இருந்தது. இதைப் பற்றி ஒரு வார்த்தைகூட வரவு -- செலவுத் திட்டத்தில் இல்லை. இதைப் பற்றிப் பேசாமல் இருப்பது ஒரு பெரும் பிரச்சனை" என்றார்.

இதேவேளை, அரச பணியாளர்களுக்கு ஊழியர்களுக்கு வழங்கப்படும் சம்பள அதிகரிப்பு போதுமானதாக இல்லை என்று தபால் தொழிற்சங்க முன்னணியின் அழைப்பாளர் சிந்தக பண்டாரவும் தெரிவித்தார்.

அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை ஆளும்தரப்புமறுபரிசீலனைசெய்யவேண்டும் என்று சுகாதார தொழிற்சங்க கூட்டணியின் அழைப்பாளர்சானகதர்மவிக்ரமதெரிவித்தார்.

இருப்பினும், சிலதரப்பினர் இந்த ஆண்டு வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளை ஆய்வுசெய்யாமல்கருத்துக்களைவெளியிட்டு வருகின்றனர் எனவும், எதிர்காலத்தில் இதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என்றும் தேசிய தொழிற்சங்க மத்திய நிலையத்தின் பிரதிச் செயலாளர் நாடாளுமன்றஉறுப்பினர்சந்தன சூரியராச்சி கோரிக்கை விடுத்துள்ளார்.

## நீதிமன்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாதாள குழுக்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதால் ஆளும்தரப்பை நெருக்கடிக்குள்ளாக்க ஒருதரப்பினர் முயற்சிக்கிறார்கள். அழுத்தங் களுக்கு நாங்கள் அடிபணியப் போவதில்லை. அனைத்து விசாரணைகளும் முறையாக முன்னெடுக்கப்படும்.

புதுக்கடை நீதிமன்றத்தில் இன்று (நேற்று) இடம்பெற்ற சம்பவம் கவலைக்குரியது. துப்பாக்கிச்சூடுநடத்தியநபர்புத்தளம்பகுதியில் வைத்துகைதுசெய்யப்பட்டுள்ளார்.முறையான விசாரணைகளை மேற்கொண்டு இந்தச் சம்பவத்தின் பின்னணியைப் பகிரங்கமாக வெளிப்படுத்துவோம்.

கடந்த கால ஊழல் மோசடிகள், படுகொலைகள் குறித்து விசாரணைகளை மேற்கொண்டுள்ள நிலையில் குறித்த குற்றங்களுடன்தொடர்புடையவர்கள்தற்போது கலக்கமடைந்து தூய்மையானவர்களை போல் பேசுகிறார்கள். ஆளும்தரப்பின் சட்டவொழுங்கினை கேள்விக்குள்ளாக்கும் தரப்பினர்களின்காலத்தில்தான்பலசம்பவங்கள் இடம்பெற்றன.

நீதிமன்றம் சுயாதீனமாக செயற்படுவதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம்.அதேபோல்பொலிஸ்விசாரணைகளும் முறையாக முன்னெடுக்கப்படுகின்றன. கடந்த காலங்களில் இடம்பெற்ற சர்ச்சைக்குரிய சம்பவங்களின் உண்மை வெகுவிரைவில் வெளிவரும் என்றார்.

## மீள்குடியேற்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலையில் ஆளும்தரப்பு முன்வைத்திருக்கும் வரவு - செலவு திட்டம் மக்களை ஓரளவேனும் வாழவைக்கும்வகையில்அமைந்துள்ளதாகவே காண்கிறோம். குறிப்பாக மலையக மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு தேவையான அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள பல மில்லியன் ருபாக்கள் ஒதுக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

அதேபோன்று வடக்கு மாகாண பாடசாலைகள் போரால் பாதிக்கப்பட்டு அங்கு மாணவர்கள் மர நிலழில் கல்வி கற்றுவந்த நிலையில், அப்போது இருந்த ஆளும்தரப்புகள் பாடசாலைகளை நிர்மாணித்து அந்த நிலைமையை மாற்றியமைத்தபோதும் இன்னும் சில பாடசாலைகளின் நிர்மானப் பணிகள்பூர்ணப்படுத்தப்படாமல்இருக்கின்றன. வன்னி மாவட்டத்தில் மாத்திரம் அவ்வாறான 38 பாடசாலைகள் இருக்கின்றன. அவற்றில் 14 பாடசாலைகளுக்கு நாங்கள் நிதி ஒதுக்கீடு செய்து அபிவிருத்தி பணிகள் ஆரம்பிக்கப்படும்போது தேர்தல் வந்ததால் அந்த வேலைகள் இடைநிறுத்தப்பட்டன. அந்தப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளை ஆளும்தரப்புத் தொடங்கி முழுமைப்படுத்தவேண்டும்.

யாழ். வளாகமாக இருந்த வவுனியா பல்கலைக்கழகம்தற்போதுதரம்உயர்த்தப்பட்டு வவுனியா பல்கலைக்கழகமாக மாறி இருக்கிறது. இதில் மருத்துவ பீடத்தை ஆரம்பிக்க நாங்கள் கடந்த காலங்களில் நடவடிக்கை எடுத்துவந்தோம். என்றாலும் இந்த வரவு செலவு திட்டத்தில் அது தொடர்பில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. அதனால் தற்போது ஒதுக்கப்பட்டிருக்கும் நிதியில் இது தொடர்பாகவும் கவனம் செலுத்தவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று வடக்கு மாகாணத்துக்கு அதிகளவில் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது தொடர்பில் ஆளும்தரப்புக்கு நன்றி செலுத்துகிறோம். அந்த நிதி ஒதுக்கீட்டில் கடந்த காலங்களில, இடை நிறுத்தப்பட்ட வேலைத்திட்டங்களை முழுமைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

போர் 2009ஆம் ஆண்டு முடிவடைந்தபோதும் இன்னும் அங்கு மீள் குடியமர்வு முடிவடையவில்லை. சுமார் 17ஆயிரம் குடும்பங்கள் வரை இன்னும் மீ ள் குடியேற்றப்பட இருக்கின்றன. கடந்த கால ஆளும்தரப்புகள் இந்த நடவடிக்கையை மேற்கொண்டாலும் சரியான பொறிமுறையை பின்பற்றாமல் மீள்குடியமர்வு செயற்பட்டதால் பிச்சைக்காரனின் புண் போன்றே அதுவும் தொடர்ந்து இருந்து வருகிறது. அதனால் இந்த ஆளும்தரப்பு வடக்கில் போரால் பாதிக்கப்பட்ட மக்களை மீள் குடியேற்றும் நடவடிக்கையை முடிவுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும். என்றாலும் இதற்காகஒதுக்கப்பட்டிருக்கும்1500மில்லியன் ரூபாய் போதுமானதாக இல்லை. 5 ஆயிரம் மில்லியனாவது ஒதுக்கவேண்டும் - என்றார்.

## ஆளும்தரப்பின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் பொலி-ஸாரும் அதிருப்திக்குள்ளாகியுள்ளனர். இதனால் தமக்குரிய பிரதேசத்தில் கடமையாற்றுவதற்கான அர்ப்பணிப்புஅவர்கள்மத்தியில்குறைவடையக் கூடும். இதேவேளை மறுபுறத்தில் இராணுவம் மற்றும் புலனாய்வு பிரிவினரை பழிவாங்கும் படலங்களும்முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

இவை அனைத்தின் ஊடாகவும் நாட்டின் பாதுகாப்புபலவீனமடைந்துகொண்டிருக்கிறது. தற்போது பழைய குற்றங்களுக்காக கடற்படையினரும்கைதுசெய்யப்படுகின்றனர். இவ்வாறான செயற்பாடுகளால் தேசிய பாதுகாப்பை வலுப்படுத்திய குழுவினர் பலவீனப்படுத்தப்படுகின்றனர். இவர்கள் பலவீனமடைவதால் தான் பாதாள உலகக்குழுவினர் தலைதூக்குகின்றனர்.

இவ்வாறான நிலைமையில் நாளுக்கு நாள் குற்றச் செயல்கள் அதிகரிக்குமே தவிர குறைவடையாது. அவற்றை நிறுத்தக் கூடிய இயலுமை இந்த அரசாங்கத்துக்கு இல்லை. போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் பாதாள உலகக் குழுவினரை ஒழிப்பதாகக் கூறி ஆட்சிக்கு வந்த அரசாங்கத்துக்கு அந்த வாக்குறுதியையும் நிறைவேற்ற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

## பல பெயர்களில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பியுமாங்க கந்தனராச்சி என்ற பெயரைப் பயன்படுத்தியுள்ளார் எனவும் தெரியவந்துள்ளது.

கொடிகாரகே கசுன் பிரபாத் நிஸ்ஸங்க என்ற பெயரைக் கொண்ட போலியான சட்டத்தரணி அடையாள அட்டையையும் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

கனேமுல்ல சஞ்சீவவின் கொலை தொடர்பான மேலதிக விசாரணைகள் கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவினரால் முன்னெடுக்கப்படுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

அதன்படி, எதிர்கால விசாரணைகளில், இந்தச் சந்தேகநபர் மற்றும் கனேமுல்ல சஞ்சீவவின் கொலையில் அவருக்கு உதவிய மற்றும் உடந்தையாக இருந்த அனைவரையும் பற்றிய உண்மையான தகவல்களை வெளிக்கொணர முடியும் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, 'கனேமுல்ல சஞ்சீவ' என்ற சஞ்சீவ குமார சமரரத்னவின் கொலை குறித்து விசாரணை நடத்தி வரும் பொலிஸார், தற்போது சட்டத்தரணி வேடத்தில் வந்து கொலை செய்த நபர் ஜனவரி 7 கல்கிஸ்ஸை, வட்டரப்பல பகுதியில் இரண்டு பேரை சுட்டுக் கொன்ற துப்பாக்கிதாரி எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதற்கிடையில், சிறைச்சாலையில் இருந்து நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்ட கனேமுல்ல சஞ்சீவவின் பாதுகாப்பிற்காக சிறைச்சாலை அதிகாரிகளுடன், 12 விசேட அதிரடிப்படை அதிகாரிகளும் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.

### உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான

# தமிழ் அரசின் வேட்பாளர்கள் குறித்து உடுப்பிட்டியில் நேற்று ஆலோசனை

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் உடுப்பிட்டித் தொகுதியின் உள்ளூராட்சித் தேர்தல் வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் ஆலோசனைக் கூட்டம் மந்திகை மடத்தடியில் அமைந்துள்ள வடமராட்சி தமிழ் அரசுக் கட்சியின் அலுவலகத்தில் நேற்று மாலை இடம்பெற்றது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சின் பொதுச் செயலாளர் பொறுப்பை ஏற்றுள்ள சுமந்திரன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது. கட்சியின் கொடி ஏற்றி வைக்கப்பட்ட பின்னர் கூட்டம் தொடங்கியது.

கட்சியின் ஆதரவாளர்களால் சுமந்திரனுக்குப் பொன்னாடை போர்த்தியும் மாலை அணிவித்தும் கௌரவம் வழங்கி வரவேற்றனர். தொடர்ந்து உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேடபாளர்கள் தொடர்பில் ஆராயப்பட்டது.

கட்சியின் முடிவுப்படி ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுவில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கும் அதேநேரம் புதியவர்களாக யாரைப் போடுவது என்பது தொடர்பிலும் ஆராயப்பட்டது.










# சாரணர் சங்கத்தின் வவுனியா கிளையின் புதிய நிர்வாக தெரிவு

வவுனியா மாவட்ட சாரண சங்கத்தின் நிர்வாகத் தெரிவானது செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத்சந்திர தலைமையில், இலங்கை சாரணர் சங்கத்தின் உதவி பிரதம ஆணையாளர் கா.அமிதன் ஆகியோரின் பங்குபற்றலுடன் இந்நிகழ்வு இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட சாரண சங்கத்தின் தலைவராக ஆசிரியர் வள முகாமையாளர் (புளியங்குளம்) சு.ஜெயச்சந்திரன் அவர்களும், செயலாளராக வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்கத்தின் முகாமையாளர் பூ.சர்மிலன் அவர்களும், பொருளாளராக வெளிச்சம் அறக்கட்டளையின் தலைவர் பா.லம்போதரன் அவர்களும், உப தலைவராக வவுனியா தெற்கு வலயக் கல்வி பணிமனையின் நிர்வாக உதவியாளர் ப.பிறேமதிலக அவர்களும், பதக்க செயலாளராக வவுனியா சிதம்பரபுரம் ஸ்ரீநாகராஜா வித்தியாலயத்தின் அதிபர் க.ஸ்ரீகந்தவேள் அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன், நிர்வாக உறுப்பினர்களாக வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) நா.கமலதாசன், மடு வலயத்தில் பிரதி கல்வி பணிப்பாளர் ம.ஜெயரூபன், வவுனியா தெற்கு வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆர்.வீரசிங்கம், உதவி மாவட்ட ஆணையாளர்களான வவுனியா வடக்கு வலயக்கல்வி பணிமனையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.சபேசன், வவுனியா மறவன்குளம் பாரதிதாசன் வித்தியாலயத்தின் ஆசிரியர் இ.சந்திரமோகன், வவுனியா சிதம்பரபுரம் ஸ்ரீ நாகராஜா வித்தியாலயத்தின் ஆசிரியர் சு.காண்டீபன் அவர்களும், சாரண தலைவர்களான வவுனியா சிதம்பரபுரம் ஸ்ரீநாகராஜா வித்தியாலயத்தின் ஆசிரியர் செ.மயூரி, வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி ஆசிரியர் பா.மேரிஜெயறூபினி அவர்களும், திரி சாரண தலைவரும், தனியார் நிறுவன உத்தியோகத்தருமாகிய பி.கெர்சோன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். 100





# அங்குரார்ப்பண நிகழ்வு

(ஸாகிர்)

தேசிய சமாதான நீதிவான்கள் சபையின் அங்குரார்ப்பண நிகழ்வும், கட்டமைப்பும், எதிர்காலத் திட்டமிடலும், எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நிந்தவூர் அட்டப்பள்ளம் ரிலாக்ஸ் கார்டன் என்னும் இடத்திலே காலை 8:30 மணி தொடக்கம் 1:00 மணி வரை இடம்பெறவிருக்கின்றது.

இந்த நிகழ்வு அகில இலங்கை சமாதான நீதிபதிகள் சபையினுடைய ஸ்தாபகத் தலைவரும்சமூகசெயற்பாட்டாளரும், அகில இலங்கை சமாதான நீதிவானுமான ஏ.எல். அன்ஸாரின் வழிகாட்டலில், தலைமையில் இடம் பெறும்.

இதற்கு கல்முனை காதி நீதிவானும் சிரேஷ்ட சட்டத்தரணியுமானபழீல்அன்ஸார் மௌலானா, சிரேஷ்ட சட்டத்தரணியும்பதில் நீதிபதியுமான நஸீர், சட்டத்தரணிகளான ரொஷான், அஸாம் உட்பட கல்விமான்கள், நாட்டில் பல பாகங்களில் இருந்து அநேகமான சமாதான நீதிவான்கள் இந்த நிகழ்லே கலந்து சிறப்பிக்கவிருக்கிறனர்.

எதிர்காலத்தில் சமாதான நீதிவான்களுக்கு அரசு மூலம் பல சலுகைகளை, கௌரவங்களைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கமாகவும் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அன்றைய தினம் சமாதான நீதிவான்களுக்கான தலைமைத்துவம் மற்றும் ஊடகம் சமாதான நீதிவான்களுடைய கடமை தொடர்பாக செயலமர்வும் இடம் பெறவிருக்கின்றது.

இந்த நிகழ்விலே கலந்து கொள்கின்ற அனைத்து சமாதான நீதவான்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட இருக்கின்றன.

எதிர்காலத்திலே நாட்டின் நாலா பாகங்களிலும் இருந்து தேசிய சமாதான நீதிவான் அமைப்பிலே அங்கத்துவம் வகிக்கும் 100 சமாதான நீதிபதிகளுடைய அறிமுகம் தாங்கி வருகின்ற நூல் முதற்கட்டமாக நோன்புப் பெருநாளின் பின்னர் மிக பிரம்மாண்டமான முறையிலே வெளியீடு செய்யப்பட இருக்கிறது.

தேசிய சமாதான சபையில் இருக்கின்ற அனைத்து சமாதான நீதிபதிகளும் 'சமாதானத்திற்காக உழைக்கும் கரங்கள்' என்னும் மகுடத்தின் கீழ் அவர்களுக்கு விருதுகள் வழங்கப்படவிருக்கின்றன.

அதேவேளை, அன்றைய தினம் நிந்தவூர், அட்டப்பள்ளம் ரிலாக்ஸ் கார்டனில் மதியம் 2 மணி முதல் 5 மணி வரை அகில இலங்கை ஐக்கிய மக்கள் கட்சியினுடைய ஏழாவது மாநாடும் இடம் பெறவுள்ளது.

இதில் நாட்டில் பல பாகங்களில் இருந்து கட்சித் தொண்டர்கள், அபிமானிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கவிருக்கின்றனர்.

கட்சியின் ஏற்பாட்டிலே தெரிவு செய்யப்பட்ட மாணவ, மாணவிகளுக்கு பாடசாலை உபரணங்களும் கட்சி நடத்திய முன் பள்ளிகளுக்கிடையிலான சித்திரப் போட்டியில் கலந்து கொண்ட மாணவர்களுடைய கௌரவவிப்பும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும்.

இந்த நிகழ்வுக்கு கல்வியலாளர்கள், இளம் அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள், சட்டத்தரணிகள் என பலரும் இதிலே கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

# உளவளத்துணை பாடநெறியை நிறைவு செய்தவர்களுக்குப் பட்டமளிப்பு விழா!

(றிபாஸ்).

ஹாட்வர்க் அகடமியின் ஐந்தாவது பட்டமளிப்பு விழா கொழும்பு சி.ஐ. டி.ஏ கேட்போர் கூடத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கலாநிதி றூமி அமித் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு பிரதி சபாநாயகர் டாக்டர் ரிஸ்வி சாலிஹ் பிரதம அதிதியாகவும் ஜே.ஜே பவுண்டேஷனின் ஸ்தாபகர் ஐ. வை.எம்.ஹனீப் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர்.



தொழில் வான்மை உளவளத்துணை பாடநெறியை நிறைவு செய்த பல மாணவர்களுக்கு அதிகளால் பட்டம் வழங்கி வைக்கப்பட்டது.





# மரநடுகை திட்டத்தில் ஈடுபட்டார்கள் நாம் இலங்கையர்கள் அமைப்பினர்

(றிபாஸ்)

'நாம் இலங்கையர்கள்' எனும் அமைப்பால் பத்து லட்சம் மரநடுகைத்திட்டத்தின் கீழ் பாலமுனை கடற்கரை பூங்காவில் மரநடுகை இடம்பெற்றது.



அமைப்பின் தலைவர் எஸ்.எல்.றஹமத்துல்லாஹ் தலைமையில் இடம்பெற்ற இநத் நிகழ்வில் சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பொதுச்சுகாதாரபரிசோதகர்கள், அமைப்பின் அங்கத்தவர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டு மர நடுகையில் ஈடுபட்டனர்.





# இலங்கைக்கான பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் முஸ்லிம் காங்கிரஸ் முக்கியஸ்தர்கள் சந்திப்பு

(சினீஸ் கான்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமின் அழைப்புக்கமைய, இலங்கைக்கான பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் இளைப்பாறிய மேஜர் ஜெனரல் பஹீம்-உல்-அஸீஸ் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முக்கியஸ்தர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றக் கட்டடத்தில் இடம்பெற்றது.

இதன்போது, லாஹூர் பிராந்திய கௌரவ கொன்ஸல் ஜெனரல் யாஸின் ஜோயிஆ தலைமையில் தற்போது இலங்கை வந்துள்ள வர்த்தகத் தூது குழுவினர் வருகை தந்து, வர்த்தக துறையில் இங்கு முதலீடுகளை மேற்கொள்வது தொடர்பில் கலந்துரையாடினர்.

குறிப்பாக தகவல் தொழில் நுட்பம் மற்றும் உல்லாசப் பயணத்துறை தொழிலாண்மை என்பவற்றை மையப்படுத்தியதாக நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களான கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் மற்றும் எம்.எஸ். உதுமாலெப்பை ஆகியோர் பங்கேற்றனர்.



# முஸ்லிம் சமய செயற்பாடுகள் பற்றி வைத்தியர்களுக்கு விளக்கமளிப்பு

(ஸாகிர்)

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் வேண்டுகோளுக்கிணங்க அதன் மூலம் நடத்தப்படும் அரச மொழிகள் கல்வி பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த 40 வைத்தியர்களுக்கு முஸ்லிம் சமய செயற்பாடுகள் தொடர்பாக விளக்கமளிக்கும் நிகழ்வு முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் மூலம் வெள்ளவத்தை ஜும்ஆப் பள்ளிவாசலில் நடைபெற்றது.

இந் நிகழ்வை வெள்ளவத்தை ஜும்ஆப் பள்ளிவாசல் மற்றும் அதன் நிர்வாகிகள் குறுகிய காலத்தில் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியின் மூலம், முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம், முஸ்லிம் சமுதாயத்தின் பண்பாடுகள் மற்றும் மதப்பண்புகளின் ஆழமான புரிதலை உருவாக்க கவனம் செலுத்தியது.

இதில் வளவாளர்களாக வெள்ளவத்தை ஜும்ஆப் பள்ளிவாசலின் வேண்டுகோளின் பேரில் நிதா பவுண்டேஷன் நிறுவனம் பங்கு கொண்டு இந்த நிகழ்ச்சியை நடத்தினர்.





காலைக்கதிர் Kalaikkathir

# கிழக்கு மாகாண கைப்பணியாளர்களுக்கான விருது வழங்கும் விழா திருகோணமலையில்

(அபு அலா)

2024 ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணத்தில் சாதனை படைத்த கைப்பணியாளர்களுக்கான மாபெரும் விருது வழங்கும் விழா திருகோணமலை உப்புவெளி பிரதேச சபை கேட்போர் கூடத்தில் திங்கட்கிழமை இடம்பெற்றது.

கிழக்கு மாகாண கிராமியத் தொழிற்துறைத் திணைக்கள மாகாண பணிப்பாளர் நா.மணிவண்ணன் ஏற்பாட்டில் இடம்பெற்ற இவ்விழாவுக்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாண முதலமைச்சரின் செயலாளர் பைஷல் ஆப்தீன் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

மேலும் சிறப்பு அதிதிகளாக மாகாண சபை செயலக செயலாளர், மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள், மாகாண திணைக்களத் தலைவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இதன்போது தேசிய மற்றும் மாகாண மட்ட சில்ப அபிமானி தேசிய அருங்கலைகள் மற்றும் தேசிய கைத்தறிப் புடைவைத் தயாரிப்புப் போட்டி மற்றும் நெசவு வாரம் ஆகிய போட்டிகளில் பங்குபற்றி, வெற்றிபெற்றசாதனையாளர்கள்கௌரவிக்கப்பட்டனர்.

தேசிய மட்டத்தில் வெற்றி பெற்ற 12 உற்பத்தியாளர்களும், மாகாண மட்டத்தில் சாதனை படைத்த 170 உற்பத்தியாளர்களுக்கு இவ்விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.















# கேரளா கஞ்சா 18 கிலோ 169 கிராமை வீட்டில் பதுக்கிவைத்தவருக்கு 7 நாள்கள் தடுப்புகாவல்

(பாறுக் ஷிஹான்)

கேரளக் கஞ்சா 18 கிலோ 169 கிராமை வீட்டில் உள்ள கட்டிலின் கீழ் சூட்சுமமாக மறைத்து வைத்திருந்த சந்தேக நபரை 07 நாள்கள் தடுப்புக்காவலில் வைத்து விசாரணை மேற்கொள்வதற்கு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை கல்முனை விசேட அதிரடிப்படையினரால் 18 கிலோ 169 கிராம் கேரளக் கஞ்சாவுடன் 33 வயது சந்தேக நபர் கைதாகிய நிலையில் செவ்வாய்க்கிழமை கல்முனை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தார்.

இதன் போது கல்முனை நீதிமன்ற நீதிவான் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 18 ஆந் திகதி 07 நாள்கள் தடுப்புக்காவலில் வைத்து விசாரணை செய்யுமாறு உத்தரவு பிறப்பித்துள்ளார்






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.02.2025இல் வெளியிடப்பெற்றது